சிவமயம்

# இந்து சாதனம்

சைவ பரிபாலன சபை வெளியீடு.

வெள்ளிக்கிழமை தோறும் வெளிவருவது

# HINDU ORGAN

செய்தித் தாளாகப் பதிவுபெற்றது

பிரதி விலை : சதம் 50.

ஆரம்பம விரோதி ௵ (1889) ஆவணிமீ 28-ம் உ அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450. காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம் கொலைபேசி: 356

புத்-கூ0] யாழ்ப்பாணம்:- காலயுத்தி ௵ ஆவணி மீ கசு & உ௩ ௳ வெள்ளிக்கிழமை (1&8 9-1978) [இல-ககக

# புலத்துறைப் புலோலி தந்த உத்தம புருடன்

## சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரம் வாழ்க்கைச் சால்பு

'சைவப் பெரியார்' என்று தமிழ்கூறும் நல்லுலகமெங்கும் புகழ்பெற்ற, புலோலியூர் சு. சிவபாதசுந்தரம்பிள்ளை அவர்களைச் சைவ சித்தாந்தம் பயிலும் ஐரோப்பியரும் அமெரிக்கரும் நன்கறிவர். எம் முந்தையோர் வழி வந்த வைதிக ஒழுக்கத்தையும் சனாதன தர்மத்தையும் மரபு வழி பேணிக் காத்து நமக்குத் தந்த ஸ்ரீ-ல-ஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களுக்குப் பிறகு சைவங் காத்தவருள் சிவபாதசுந்தரனாரும் ஒருவர்.

சைவப்பெரியார் பிறந்திலரேல் சின்னஞ் சிறுவர்களுக்கான சைவபோதக் கதைகளும், சித்தாந்தக் கட்டுரைகளும், சிவஞானபோதக் கருத்து விளக்கங்களும் திருவருட்பய

### பல்கலைப் புலவர் க. சி. குலரத்தினம் அவர்கள்


னுக்குத் தெளிவான சிற்றுரையும் வெளி வந்திருக்கமாட்டா. பள்ளித்தலமனைத்தும் கோயில்கள் அமைத்துக் காலை வழிபாட்டுடன் பாடமாரம்பிக்கும் மரபுவழியும் மங்கியிருக்கும்,

புலத்துறை போன புலவர் பெருமக்கள் பலரைத் தந்த புலோலியில் சைவாசார முள்ளகுடும்பத்தில் கல்வியறிவால் உயர்ந்த பெற்றோர்க்குப் பிள்ளையாக வந்தவர் சிவபாதசுந்தரனார். வார்கடைச்சாமியாரின் திருவருளுக்கிலக்காகி வாழ்ந்த சுப்பிரமணியம் என்பாரின் தவப்பயனாக வள்ளியம்மை என்னும் மாதரசியின் மணிவயிற்றில் வந்தவர் இவர். இவர் பிறந்த நாள் 17-1-1878 என்ப.

இவர் இளமையில் பார்வதிப்பிள்ளை என்னும் மாமியாரிடத்தில் நல்ல முறையிற் கல்வி கற்றார். பார்வதிப்பிள்ளை திருமணஞ் செய்யாது ஔவைப் பாட்டியார் போல அறிவாளியாய் வாழ்ந்தவர். அவரைப் பாருத்தைப்பாட்டி என அக்காலத்திற் குழந்தைகள் வழங்கினர். துள்ளித்

( வளர்ச்சி 6-ஆம் பக்கம் )

சைவப் பெரியாரென்று ஏத்துமே இப்பார் !



தோற்றமோ சுத்தசைவச் சூத்திரச் சொற்பொருள்
ஆற்றலோ ஆசிரிய அற்புதம் — மாற்றுமதக்
கூற்றுவர்க்குக் கூற்றமிவர் சைவப் பெரியாரென்
றேற்றுமே இப்பார் இசைத்து.

நூற்றாண்டுப் பெரு விழா

## சுழிபுரத்தில் எழில்பெற நிகழும்

### மக்கள் மத்தியில் கரைகடந்த உற்சாகம்

### சைவப் பெரியாருக்கு அஞ்சலி

காலயுத்தி ஆவணி 17 - ஆம் நாள் (9 - 9 - 78) சனிக்கிழமை சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மண்டபத்தில் காலை 8-00 மணிக்கு ஆரம்பமாகும்.

முதல்நிகழ்ச்சியாக சைவப்பெரியார் அவர்களின் திருவுருவப் படத்தினை மூளாய்ப் பிள்ளையார் ஆலயத்திலிருந்து விழா மண்டபத்திற்கு ஊர்வலமாக எடுத்து வரல்,

சொற்பொழிவுகள், கருத்துரைகள், கவியரங்கு, புராணபடனம, விழா மலர் வெளியீடு, முதலியன முக்கிய நிகழ்ச்சிகள்.

காலை: திரு. ச, சிதம்பரப்பிள்ளை அவர்களும், மாலை : பண்டிதமணி இலக்கிய கலாநிதி சி. கணபதிப் பிள்ளை அவர்களும் தலைமை தாங்குவார்கள்.

''சைவக் கிரியை விளக்கம்'' நூல் சைவ பரிபாலன சபைத் தலைவர் திரு. ச. செல்வராசா அவர்களால் வெளியிட்டு வைக்கப்படும்.

சைவப் பெரியார் நூற்றாண்டுவிழா மலர் உட்படப் பல நூலகள் ஆங்கு விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.



## சைவப்பெரியார் சைவ பரிபாலன சபையின் 'மகுடமணி'

திரு. ச. செல்வராசா (சட்டத்தரணி) அவர்கள் (தலைவர். சைவபரிபாலன சபை, யாழ்ப்பாணம்)

இன்று வெளியாகும் 'இந்துசாதன' இதழ் சைவப்பெரியார் நிறைவு மலராக விளங்குவது பொருத்தமே. சைவ பரிபாலன சபையை நிறுவிய பெரியார்களின் நல்லெண்ணப்படி சபைத் தலைமைப் பரம்பரை விசேடமாக அமைந்துள்ளது. இந்த அரும் பரம்பரையில் ஒருவர் சைவம் பேண வாழ்ந்த சித்தாந்தச் செம்மல் சு, சிவபாதசுந்தரம்பிள்ளை அவர்கள்.

சைவ இலக்கியக் கைந்நூல்கள்போல இப்பெரியார் எழுதியவற்றை இச்சபைக்கே அவர் உபகரித்தார். அதற்குக் காரணம் உண்டு. நாவலர் பெருமானின் நற்றொண்டர் தொடக்கிய சபை அந்தப் பண்பு மாறாது அவ்வகையில் வளர்ந்துவருகின்றதென்பதனால் எனக. ஆகவே சைவஉலகம் பெருமிதமாகக் கொண்டாடும் இவ்விசேட நூற்றாண்டுவிழாச் சார்பாக எங்கள் சபை இந்துசாதனம் மூலம் நன்றி செலுத்தும் பணியை மேற்கொண்டது சாலப் பொருந்தும்,

இவ்வேளையில் ஒன்றுமட்டும் குறிப்பாகக் கூறுதல் அவசியம். சைவப்பெரியாரின் அரிய நூல்களைக் கல்லூரிகள், நூல் நிலையங்கள் சைவாபிமானிகள் பெற்றுப் பயனடைய வேண்டுமென்று நாம் விரும்புவதுடன் புத்திமதியும் புகட்டுகின்றோம்.

# சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

வான்முகி லாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன் கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம்

இன்னது ...

திருச்சிற்றம்பலம்


# இந்துசாதனம்

காலயுத்தி ஞூ ஆவணி மீ கக & உ௩ - உ வெள்ளி


## "வானவர்கள் வாழ்த்துவதும் தாம் "வாழ்வான்"

இறைவனை இமையவர்கள் ஏத்துகின்றார்களே இதன் பொழிப்பை திருமுறைக் குரவர் எடுத்துரைக்கும்பொழுது விண்ணோரும் தம் வாழ்விலே கண்ணுங் கருத்துமாயிருக்கின்றனர். அதற்காக வேத முதல்வனை வாழ்த்துகின்றார்கள் எனக் கனிவான விளக்கம் கூறினர்.

... ... ... ... ... அன்பரோடு மரீஇ
மாலற நேய மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரனெனத் தொழுமே.

என்ற சிவஞானபோதச் சூத்திரத்தின்படி அடியார்களை ஏத்துவதும் அம்மையப்பனை வணங்குவது போலாம்.

அத்தகைய அடியார்கள், அறுபத்து மூவர்களின் ஏனைய திருத்தொண்டர்களின் புகழ் உரைத்துத் தாம் வாழ்ந்த அடியார்க் கடியார்கள். நாவலர் பெருமான் போன்றவர்கள்.

அவ்வகையிலே தெய்வீக நெறியிற் சிறந்த சைவப் பெரியாரை 'இந்து சாதனம்' இப்பொழுது எத்தனையோ வாரங்களாக வாழ்த்தி வருகின்றது, அதுதான் வாழவேண்டி. இந்துசாதனம் என்னும்பொழுது இந்த இதழை ஏற்றுப் போற்றுகின்ற சைவர்கள் எல்லோரும் தாம் வாழவே சமய குரவர்களை வாழ்த்தி வாழ்ந்த சைவப் பெரியாரை வாழ்த்துகின்றனர்.

இந்தக் கருத்து எம் இதயத்தில் எழச் செய்தவர் சைவநெறி காக்கும் கொழும்பு மாநகர் உத்தமர் இந்துசாதன அபிமானி திரு. சு. சிவசுப்பிரமணியம் அவர்கள்

சைவப் பெரியாரின் வாழ்க்கை வண்ணம் விளங்கிய எல்லா நிகழ்ச்சிகளையும் தொகுத்தும் அன்னாரின் நன்னய நூல்களிலிருந்து மிகச் சிறந்தவற்றை அநுவதித்தும் "இந்து சாதனம்" இந்த வைபவத்தை உகந்த முறையிலே நேயர்களுக்கு சித்திரித்து வருகின்றது.

பெருந்தொண்டாக பெரியார் சைவ பரிபாலன சபை வெளியீடுகளாக உலகுக்குபகரித்த "சைவ போதம்" முதல் இரண்டு, மூன்று என்பனவற்றையும் "சைவக் கிரியை விளக்கத்"தையும் மறு பிரசுரங்களாக நாம் உதவுகின்றனம் என்னே! இந்து சாதனம் வான் — சைவ அபிமானிகள் வாழ்வான்.

நூற்றாண்டுகளுக்குள் நூற்றாண்டு என்று போற்றப்பெறும் இவ்வாண்டில் சைவம் பேணிய பேரறிஞர்களை அவர்கள் அருந் தொண்டினை நேயர்களுக்கு இந்து சாதனம் எடுத்தியம்பிய முறை தனித்துவமானது — சுருங்கச் சொல்லல், விளங்க வைத்தல் என்ற நெறி இது.

ஆகவே நாம் வாழ வேண்டும்; வாழ்வதென்றால் ஆதமலாபம் அடைதல் வேண்டும் என்ற உண்மையை உணர்பவர்கள் இப்பெருவைபவம் சார்பான எம் இதழ்களையும் மறு பிரசுரங்களையும் பெற்றுச் சைவப் பெரியாரைத்தக்க வண்ணம் எண்ணத் திருவருளை வேண்டுகின்றோம்.

## வாரியார் விரிவுரை விருந்து

கொக்குவில் மேற்கு மஞ்சவனப்பதி திருமுருகன் சந்நிதியில் 'திருப்புகழ் அமிர்தம்' ஆசிரியர் திருமுருக கிருபானந்தவாரியார் அவர்களின் தொடர் கதாப்பிரசங்க நிகழ்ச்சி இடம்பெறும். வருடாந்த பெருந்திருவிழாவைமுன்னிட்டு 8-9-78ல் ஆரம்பமாகும் இந்நிகழ்ச்சியில் "பார்வதி திருமணம்" எனும்பொருள் முகமாகத் தொடங்கும்; 18-9-78 வரை தினமும் உரைநிகழும்.

## சைவப் பெரியார் பெயரால் ஒரு பிரார்த்தனை

பரமேஸ்வரக் கல்லூரி முன்னாள் அதிபர்
உயர்திரு மு. ஞானப்பிரகாசம் B A., B Sc, (Lond) அவர்கள் வழங்கியது.

யாழ்ப்பாணத்தில் நீண்ட காலமாக, தமிழ்ப் புலமையும் சைவ ஞான உணர்ச்சியும் சிறந்து விளங்கியதற்குக் காரணம் குரு சீட பரம்பரை வழியாக வந்த கல்வி முறையேயாகும். இக் கல்வி முறை இக் காலத்தில் அருகிப்போய் மறைந்தொழியும் தறுவாயில் இருக்கிறது இக் கல்வி முறையிற் கற்று வருபவர்களே உண்மையான பாண்டித்தியம் பெற்று விளங்க இயலும் என்பது பெரியோர்கள் கூறிய முடிபு. இக் குரு சீட பரம்பரைக் கல்வியை அக் காலத்தில் தழைக்கச் செய்தவர்கள் ஆரியச்சக்கரவர்த்திகளே இவர்களால் இயற்றப்பட்டு இக்காலத்திலும் வழங்கி வரும் செகராசசேகரமாலை, பரராசசேகரம், தக்கிண கைலாயபுராணம், கைலாயமாலை முதலியன இவர்களது தமிழ்ப்புலமை சைவ ஞான உணர்ச்சி நிலைகளைக்காட்டும் சிறந்த எடுத்துக்காட்டு நூல்களாம். குறித்த புலமையும் உணர்ச்சியும் பறங்கியர் ஆட்சிக் காலத்திலும், ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்திலும் ஒதுக்கப்பட்டமையால், சைவத் தமிழ் வீறுகொண்டு எம் மத்தியில் ஒருவர் பின் ஒருவராய்த் தோன்றியவர்களே நாவலர் பெருமானும் சிவபாதசுந்தரம்பிள்ளை அவர்களும்,

இவர்கள் இருவரையும் 'யாழ்ப்பாணம் பெற்றெடுத்த புண்ணியக் கண்கள் இரண்டு' எனக் கூறலாம். எமக்கெல்லாம் அழியாப் புகழ்தேடித்தந்த அவர்கள் இருவர் பெயரினாலும், குரு சீட பரம்பரைக் கல்விக்குப் பேராதரவு இந்த ஆரியச் சக்கரவர்த்திகள் பெயரினாலும் சைவத் தமிழ்த் தெய்வத்தை — இந்த யாழ்ப்பாணப் புண்ணிய பூமியில பூசித்து வந்த தமிழ்ப் புலவர்கள், சைவ ஞானிகள் ஆகிய எல்லோர் பெயராலும் இச் சந்தர்ப்பத்தில் யாம் ஒன்று கூறுவோம். யாழ்ப்பாணத்திலுள்ள பல்கலைக் கழக வளாகத்தில், மிகச்சிறந்த தனித்துவம் பெற்ற குருசீட பரம்பரைக் கல்வி செழித்து வளர்தற்குரிய ஒரு ஞானபீடம் நிறுவப்படுதல்வேண்டும் என்பதே எமது பிரார்த்தனை அதற்கு எல்லாம் வல்ல பார்வதி பரமேஸ்வர மூர்த்திகள் தம் திருவருளைப் பாலித்தருள வேண்டுமென்றும் இறைஞ்சிய வண்ணம் இருக்கின்றோம்.

## பலதுறைப் பண்பமர்ந்த சைவப் பெரியார்

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அதிபர்
திரு. க. அருணாசலம் B. A., Dip-in-Ed அவர்கள்
வழங்கிய
வாழ்த்துச் செய்தி

சைவப் பெரியார் சிவபாதசுந்தரனார் அவர்களின் நூற்றாண்டு விழாவினையொட்டி, 'இந்துசாதனம்' பத்திரிகை ஒரு சிறப்பு மலர் வெளியிடுவதையிட்டு விக்ரோறியாக் கல்லூரியில் உள்ள நாம் அனைவரும் மிகுந்த மகிழ்ச்சியும் நன்றியும் உடையவர்களாக இருக்கின்றோம்,

நல்லைநகர் தந்த ஆறுமுக நாவலர் அவர்களுக்குப்பின் நமது சைவசமய மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர் சைவப்பெரியார் சிவபாதசுந்தரனார் அவர்களே ஆவார்

நமது சைவப் பெரியார் சைவசமய மறுமலர்ச்சிக்கு ஆற்றிய பணியினை இன்றைய இளம் தலைமுறையினர் அதிகம் உணராதிருப்பது மிகவும் வருத்தத்திற்குரிய தாகும். சைவப்பெரியார் நமது சமயத்துக்கு ஆற்றிய தொண்டின அவரது நூற்றாண்டு விழா நடைபெறும் இக் காலகட்டத்தில் நாம் அனைவரும் நினைவுகூர்ந்து நமது நாட்டின் வரலாற்றில் அவருக்குரிய சிறப்பான இடத்தினை நிர்ணயித்தல் நமது கடமையாகும்.

சைவ உலகுக்கு அவர் ஆற்றிய பணிகள் மிகவும் விரிவானவை. அவரது தூயவாழ்வும், சிறப்பான தொண்டும் இன்னமும் விரிவாக ஆராயப்படாத நிலையிலேயே உள்ளன. ஆர்வமும் ஆற்றலும் உள்ளவர்கள் அவர் ஆற்றிய விரிவான ஆராய்ச்சியை மேற்கொண்டு அவராலே தொடங்கப்பட்ட பணிகள் மேலும் சிறப்பாகத் தொடர உதவ வேண்டும்.

சைவப் பெரியாரின் வாழ்வு ஒரு துறையுடன் மட்டும் அடங்கியது அல்ல.

சைவசமய மறுமலர்ச்சிக்கு வழிவகுத்தவர். சமுதாய சீர்திருத்தங்களில் ஆர்வம் காட்டியவர், பெருந்தொகையான அருமருந்தன்ன நூல்களை எழுதியவர், கல்வித்துறையில் மிக நுண்ணிய அக்கறை செலுத்தியவர் என்றிவ்வாறு பல துறைகளிலும் அவர் தொண்டாற்றிய போதிலும் சைவக் கல்விக்குப் பெரும் பணியாற்றியவர் என்ற நிலையிலேயே இன்று நாம் அவரைக் கருதுகின்றோம்.

மேல்நாட்டு மிஷனரிமார்களின் ஆதிக்கம் மிக மேலோங்கி இருந்த காலத்தில், மிகுந்த துணிவுடன் நாவலர் காட்டிய வழியிற் சென்று' சைவசமயப் பிள்ளைகள் சைவசமயச் சூழலில் சைவசமயப் பாடசாலைகளில் கல்வி கற்க வேண்டும்' என்ற குறிக்கோளை நிலைநாட்டுவதற்காக பெரும் பாடுபட்டவர் சைவப்பெரியார் அவர்கள்.

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் அதிபராக அவர் கடமையாற்றிய காலமே அவரது வாழ்வின் மிகச் சிறப்பான பகுதியாகும். விக்ரோறியாக் கல்லூரியை மிகவும் முன்மாதிரியான ஒரு சைவக்கல்லூரியாக்குவதற்கு அவர் அரும்பாடு பட்டு உழைத்தார். இந்த உழைப்பில் ஒரு சிறந்த கல்விமானின் ஆற்றலையும், அறிவு நுட்பத்தையும் அயராத பணியையும் நாம் காண்கின்றோம்.

கல்லூரி அதிபராக அவர் கடமையாற்றிய காலத்தில மிகவும் விவேகமுள்ள மாணவரிடத்தில் மட்டுமே அவர் தமது கவனத்தையும் கருத்தையும் செலுத்தவில்லை,

விவேகமான மாணவர்களின் நலன்களையும் அவர் கவனித்து வந்தது உண்மை அதன் பயனாகத்தான் இன்று இந்நாட்டில் மட்டுமல்லாது வேறு பல நாடுகளிலும் அவரது மாணவர்கள் பலர் மிகவும் உயர்ந்த அந்தஸ்தில் இருக்கின்றார்கள்.

ஆனால்—

சாதாரண மாணவர்களையும் கவனித்துக் கல்வி புகட்டுவதிலேயே அவர் தனது நேரத்தில் பெரும் பகுதியைச் செலவிட்டு வந்தார்.

வேறு பாடசாலைகளிற் படித்துத் தேர்வுகளில் வெற்றி பெற முடியாத மாணவர்கள் பலர், சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரிக்கு வந்து அதிபர் சைவப் பெரியார் சிவபாதசுந்தரனாரிடம் கல்வி பயின்று தேர்வுகளில் வெற்றி பெற்றிருக்கின்றார்கள்,

தேர்வுகளில் வெற்றி பெறச் செய்வதோடு நில்லாது ஒவ்வொரு மாணவனையும் 'நல்ல மனிதனாக' உருவாக்குவதே சைவப் பெரியாரின் நோக்கமாக இருந்தது.

1943ம் ஆண்டில் இலங்கை அரசினரால் நியமிக்கப்பட்ட கல்வி நிபுணர்களைக் கொண்ட "விசேட கல்விக் குழு" வில் சைவப் பெரியார் ஒரு உறுப்பினராகஇருந்து பெருந்தொண்டு புரிந்தார் என்பதனை ஒருசிலரே அறிவர்.

இக் குழுவின் பரிந்துரைகளே இந் நாட்டின் இலவசக் கல்விக்கும் தாயமொழிமூலம் கல்வி புகட்டுவதற்கும் வழிவகுத்தன.

இலவசக் கல்வித் திட்டத்துக்கும் தாய்மொழி மூலம் கல்வி புகட்டுவதற்கும் வழிவகுத்தன.

இலவசக் கல்வித் திட்டத்துக்கு தாய்மொழிமூலம் கல்வி புகட்டுவதற்கும் சைவப் பெரியார் பெரிதும் பாடுபட்டார் என்பதற்குச் சான்றுகள் பல இருக்கின்றன.

"ஆசிரியர்களை எவ்வாறு பயிற்றுவிக்க வேண்டும்" என்பதிலும் இவர் தனக்கேயுரிய தனித்துவமான கொள்கைகளைக் கொண்டவராக இருந்தார்என்பதும் இன்னோர் உண்மையாகும்,

சைவப் பெரியார் சிவபாத சுந்தரனாரின் பெருமைகளையும், தூயவாழ்வையும் பொதுநல நோக்கையும் பல்வேறுதுறைகளில் அவர் ஆற்றிய சிறப்புப் பணிகளையும் இன்றைய இளம் சந்ததியினர் அறிந்துகொள்வதற்கு இம்மலர் பெரிதும் உதவும் என்று நம்புகின்றேன்.

வாழ்க சிவபாத சுந்தரனார் நாமம்! தொடர்க அவர் பணிகள்.

### அலங்காரத் திருவிழா

வண்ணை - சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் அலங்காரத் திருவிழா ஆவணி 22உ (7-9-78) வியாழக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து பன்னிரண்டு தினங்கள் நிகழும்,

15-9-78 வெள்ளி சங்காபிஷேகம், இரவு பூந்தண்டிகைத் திருவிழா, 8-9-78 திங்கள் தீர்த்தத் திருவிழா. இரவு முத்துச சப்ரத்தில் வெளிவீதிஉலா.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பண்டிதமணி கண்ட சைவப் பெரியார்

## "போற்றுகம் வம்மின்"

நாவலனுர் அன்று நடந்த வழிநடந்து
யாவரையுந் தம்மருங்கே ஈர்த்திட்டார் — யாவரவர்
நூற்ருண்டு கொண்டாடி நுண்மைப் பெரியாரைப்
போற்றுகம் வம்மின் புகழ்ந்து.

— சி. க.

உ

சைவ பரிபாலன சபை

## சைவ சமய பாடப் பரீட்சை

### 1977

### பாடசாலைப் பரிசில் பெறுபவர்

1. யாழ் / வேம்படி மகளிர் கல்லூரி
   - சுவர்ணகோமளாம்பிகை வெங்கடேஸ்வரன் 7
   - சாவேஸ்வரி திலகேஸ்வரம்பலம் 8
   - ஜெயராணி விகனராஜா 9

2. யாழ். இந்து மகளிர் கல்லூரி
   - யமுனு பரம்சோதி 4
   - சுமதி ஓப்பிலாமணி 5
   - ஜெயசக்தி நடராசா 6
   - சுபாஷினி குணரத்தினம் 9

3. யாழ். இந்துக் கல்லூரி
   - ரஞ்சன சி சுப்பிரமணியம 7
   - சிவலோகநாதன பாலசுப்பிரமணியம 8

4. மானிப்பாய் மகளிர் கல்லூரி
   - சிவாஜினி கோபாலபிள்ளை 4
   - சந்திரிககா இராஜசிங்கம் 5
   - கயசானந்தி சச்சிதானந்தம் 6
   - கிருபா காசிலிங்கம் 7
   - ஜெயந்தினி நவரத்தினம் 8
   - உஷாயினி பொன்னம்பலம் 9

5. உரும்பிராய் இந்துக் கல்லூரி
   - சிவகரன் சுப்பிரமணியம் 7
   - இரஞ்சினி இராசரத்தினம் 9

6. பருத்தித்துறை மெதடிஸ்ற் மகளிர் கல்லூரி
   - சுகந்தி நடராசா 8

7. கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்
   - இந்திரமோகன் கனகசபாபதி 6
   - கமலராணி ஐயாத்துரை 7
   - மஞ்சுளா மயில்வாகனம் 9

9 கணேச வித்தியாசாலை, புங்குடுதீவு
   - வசந்தி இரத்தினசபாபதி 9

10 மாதகல் பாக்கிய வித்தியாலயம்
   - சத்தியதேவி குணநாயகம் 4
   - புஸ்பலதா சங்கரன 5
   - கலாரஞ்சனி பாலசுப்பிரமணிய சர்மா 9

11. கோண்டாவில் இ. கி. மிஷன் வித்தியாசாலை
   - சிவநேசன துரைரத்தினம 2
   - காமினி முத்துத்தம்பி 3
   - சுஜாதா சண்முகநாதன 4
   - பிரேமா பாலச்சந்திரன் 5
   - ஜெயக்குமார் துரைராசா 8
   - விஜயகுமாரி விஜயரத்தினம் 9

12. யாழ் / நாவலர் மகா வித்தியாலயம்
   - சாந்தா துரைச்சாமி 2
   - சந்திரகுமார மயில்வாகனம 3
   - சத்தியசோதி பாலசிங்கம 4
   - யோகீசன சாமிநாதன 5
   - சததிவேல் பெருமாள் ரெட்டியார் 6
   - வாசுகி வேலுச்சாமி 8
   - ஜோதிமலர் சண்முகசுந்தரம 9

13. கலைமகள் வித்தியாலயம்; மயிலிட்டி
   - ஜெயமாலினி சரவணமுத்து 2
   - பாமினி கந்தசாமி 3
   - இந்திராணி வைத்திலிங்கம் 4
   - விஜயராசா விஜயரத்தினம் 5
   - பாலசுப்பிரமணியம் எலலுப்போலை 7
   - காந்தரூபி துரைராசா 9

14. வட இந்து மகளிர் கல்லூரி
   - லம்போதரன் சங்கரபபிள்ளை 2
   - தனாநுசன் பாலசுப்பிரமணியம் 3
   - கலாதேவி சிவபாதசுந்தரம 4
   - குமரவேள முத்துலிங்கம் 5
   - அன்னதிரவியதேவி கணபதிப்பிள்ளை 4

15. காரைநகர் இந்துக் கல்லூரி
   - சக்திவேல் தம்பிஐயா 8
   - யோகேஸ்வரி செல்லத்துரை 9

16. வேலணை மத்திய மகாவித்தியாலயம்
   - ஞானசீலை மயில்வாகனம் 6
   - சுதர்சன் வடிவேலு 7
   - அகிலராணி தேவராசா 8
   - ஜெயகௌரி கணேசன் 9

17. தொண்டமானுறு மகாவித்தியாலயம்
   - திருமால்மருகன கந்தசாமி 3
   - கலாவதி கந்தசாமி 4
   - உதயகுமரன் சுந்தரலிங்கம் 5
   - மங்களலோசனி நித்தியானந்தம் 6
   - கிருபாகரன் இராசேந்திரம் 7
   - பகீரதி இரத்தினசிங்கம் 8
   - ஸ்ரீரஞ்சனி குமாரசிங்கம் 9

18. புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயம்
   - முத்துலிங்கர் கந்தையா 6
   - ஞானதயாபதி அம்மா திருஞானசம்பந்தமூர்த்தி 7
   - முருகையா சங்கரப்பிள்ளை 8

[வளரும்]

## சிந்தனையைத் தெளிவாக்கும் சைவப் பெரியார் விழா

### ச. சிதம்பரப்பிள்ளை அவர்கள்

(தலைவர், சைவப்பெரியார் நூற்ருண்டுவிழாச் சபை)

வழங்கிய

### வாழ்த்துச் செய்தி

சைவப் பெரியார் சிவபாதசுந்தரனுரின் நூற்ருண்டு நிறைவு விழாவையொட்டி சைவபரிபாலன சபை வெளியீடான "இந்து சாதனம்" பத்திரிகை சிறப்பிதழ் ஒன்றினை வெளியிட முன்வந்தது பெருமகிழ்ச்சிக்குரியதாகும்; பொருத்தமானதும் கூட.

சைவபரிபாலன சபைக்கும் சைவப் பெரியாருக்குமிடையில் நீண்டகால நெருக்கமான தொடர்பு பிரசித்தமானது. சைவசமயக் கொள்கைகளைப் பற்றியும், சமய அனுட்டானத்துக்குத் துணையான புராணங்கள், தேவாரங்கள், கிரியைகளைப் பற்றியும் சைவப் பெரியார் காலத்துக்குக் காலம் எழுதியவற்றுக்கு நூல் வடிவம் கொடுதத பெருமை சைவ பரிபாலனசபைக்கு உரியதாகும்.

சில காலமாக, பல இன்னல்களுக்கிடையிலும், யாழ்ப்பாணம் விழாக்கோலம் கொண்டிருப்பது யாழ்ப்பாணத்தின் பண்பாட்டைப் பிரதிபலிக்கின்றது. நாலாபக்கங்களிலும் விழாக்கள் — நாவலர்விழா, இராமநாதன்விழா, கலாநிதி பண்டிதமணிவிழா, கலாயோகி ஆனந்தக்குமாரசாமிவிழா, சைவப் பெரியார் நூற்ருண்டு விழா.

விழா எடுப்பது ஒரு சம்பிரதாயம்; விழாத் தலைவனை விழா உயர்த்துவதில்லை; உயர்த்தவும் முடியாது. உயர்த்தப்படவேண்டியவர்கள் விழா எடுப்போரும் விழாவில் பங்குபற்றுவோருமே. விழாவின் விளைவாக சிந்தனைத் தெளிவும் புத்துணர்ச்சியும் புதிய உத்வேகமும் ஏற்படாவிட்டால் விழா முயற்சிகள் யாவும் விழலுக்கிறைத்த நீர்போற், பயனற்றவையாம்.

இந்துசாதனப் பத்திரிகை, பல்லாண்டு காலமாக, பல் வேறு கஷ்டங்களுக்கிடையிலும், தொடர்ந்து தொண்டாற்றி வருகின்றது. வளர்பிறைபோல் மேலும் நீடித்து உழைப்பதாக.

வாழ்க! இந்துசாதனம்.

## குன்றிலிட்ட தீபம் போல விளங்கிய குரவர்

[சைவப்பெரியாரின் மாணவர் திரு செ. சின்னத்துரையவர்கள்]

ஆறுமுகநாவலர் பெருமான் காலத்திற்கு முன் பறங்கியர், ஒல்லாந்தர் முதலிய அன்னிய நாட்டினர் இலங்கையில் பெரும் பகுதியை அரசாட்சி செய்தனர். யாழ்ப்பாணக் குடாநாடு தமிழிலும், சமயத் துறையிலும் அதிக வீழ்ச்சியுற்றிருந்தது. சைவம் செய்த தவம், தமிழ்புரிந்த தவம், நாடுசெய்த தவம் இவற்றால் முடிசூடா மன்னராகவும், ஞானசூரியன் போலவும் நாவலர் அவர்கள் நல்லூரில் நாமெல்லாம் உய்யத் தோன்றினர்.

பல இன்னல்களைக் கண்டு தெறிந்தார். தமது சிறந்த நூல்களாலும், உயர்ந்த இலட்சிய வாழ்விலும் கேட்போரைப் பணிக்கும் உபந்நியாசங்களாலும் தமது ஆன்ம சக்தியாலும் யாழ்ப்பாணத்தில் சைவச்சூழலை நிலைநாட்டினுர். சைவப் பயிருக்கு வித்திட்டார். அப்பெருமகனுரால் இடப்பட்ட சைவவித்து முளைத்து வளரத் தொடங்கியது. சைவ சமய வாழ்க்கையிலும் சாயஅறிவிலும் ஒரு மறுமலர்ச்சி யாழ்ப்பாணத்தில் உருவாகியது. சைவ வித்தியாசாலைகள் எழுந்தன. புராணபடனங்கள், தீட்சை வைபவங்கள் நடைபெற்றன. வீரதங்கனை மக்கள் அனுஷ்டித்தார்கள். கோயிற்றிருவிழாக்கள் சைவ அனுஷ்டானங்கள் சிறந்து விளங்கின. பற்பல யாழ்ப்பாணக் கிராமங்களில் பற்பல சைவப் பெரியார்கள் பிறந்து சைவத்தையும் தமிழையும் வளர்த்தார்கள்.

முழுக்க முழுக்க நாவலர்பெருமானின் அடிச்சுவட்டைப் பின்பற்றி வாழ்ந்து பெருந்தொண்டாற்றியவர் சைவப்பெரியார் சிவபாதசுந்தரம் அவர்கள் ஆவார். இப்பெரியார் புலோலிகிழக்கு சைவப் பெரியார் சுப்பிரமணியப்பிள்ளையின் புத்திரன் ஆவார். சைவப் பற்றும் தமிழ் அபிமானமும் சைவப் பண்பாடும் ஓங்கி வாய்க்கப்பெற்ற ... களுக்கு ஒரேயொரு புத்திரனைப

பிறந்து புலோலிக்கு மாத்திரமல்ல சிறப்பாக யாழ்ப்பாணத்திற்கு பொதுவாக இலங்கை மக்களுக்கும் ஒரு குன்றிலிட்ட தீபம்போல வாழ்ந்தார். திருச்சிராப்பள்ளியில் கல்வி கற்று கலைமாணிப் பரீட்சையை முடித்துத் தென் இந்தியக (பீ. ஏ.) கலாசாரமும் பண்பாடும் தென் இந்தியாவின் தனித்துவம் வாய்ந்த சைவ சமயச் சூழலில் மனம் தோயப்பெற்றவராய் யாழ்ப்பாணம் வந்து திருகோணமலை திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி விக்ரோறியாக்கல்லூரி முதலிய இடங்களில் ஆசிரியர் கடமையில் சிறப்புற்றும் யாழ்ப்பாணத்தின் கல்விமான்களில் தலைசிறந்தவராக விளங்கினுர். கல்வி அதிகாரிகள் இப்பெரியாருக்குத் தனி மதிப்புக் கொடுத்தார்கள்.

இப்பெரியாரிடம் 2 வருடங்கள் கல்வி பயிலும் பெரும் பேறு அடியேன் பெற்றுளளேன். பரமேஸ்வரக் கல்லூரியில் அடியேன் 1922 இல் படிக்கும்போது அப்பெரியார் அங்கு தலைமை ஆசிரியராகக் கடமையாற்றினுர். பரமேஸ்வரக் கல்லூரியின் மேல்மாடியில் சிவகாமி சமேத நடராஜ விக்கிரகம் இருந்தது. அதற்குக் கல்லூரி மாணவர்களும் ஆசிரியர்களும் அமர்ந்து தேவார திருவாசக பாராயணம் செய்வதுண்டு. கல்லூரித் தாபகரும் தமிழரின் முடிசூடா மன்னரும் வேத சிவாகமம் தமிழ் நூல்களிலும் திருமுறைகளிலும் உறுதியான நம்பிக்கையும் அறிவும் கைவரப் பெற்ற பொன்னம்பலம் இராமநாதன் துரை அவர்களும், சைவப் பெரியார் சிவபாதசுந்தரம் அவர்களும் சேர்ந்து பல வேளைகளில் மண்டபத்திறந்த காலை 8-30 மணிக்கு

[வளர்ச்சி 5-ஆம் பக்கம்]

பல்லாயிரக்கணக்கான பத்தர் பரவிப் பரவசப்படும்
திருத்தலங்கள்

நல்லூர்க் கந்தன் | தெல்லி துர்க்கை | சந்நிதி முருகன்

சொல்லி முடியுமோ நல்லூரின் தேர்விழாச் சிறப்பு.
X X X X
சொல்ல முடியுமோ துர்க்கைச் சித்திரத் தேரின் சீர்
X X X
செல்வச்சந்நிதி முருகன் விழாச் சொல்லுந் தரத்ததோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அரும்பொன் மணியாக அமைந்த 'சைவக் கிரியை விளக்கம்' என்னும் பெரும்பொருள் விரித்த இந்நூலுக்குச் சைவப்பெரியார் வரைந்த முகவுரை மணியாரத்திற் பதித்த முத்துப்போல் விளங்குகின்றது:

## முகவுரை

சிவபெருமான் உயிர்களைத் துன்பத்தினின்றும் நீக்கி அவைகளுக்குப் பேரின்பமாகிய திருவடித் தாமரையோடு சேர்த்தற்காகச் சிற்றறிவையும், சிறுதொழில் வன்மையையும், சிற்றன்பையுந் தரத்தக்க மூவகையுடல்களைக் கொடுத்தருளினர். இவற்றை நல்வழிச் செலுத்தலாற் பேரறிவும் பேராற்றலும் பேரன்பும் வரும். இக்கருத்து "விடிவா மளவும் விளக்கனையமாயை, வடிவாதி கன்மத்து வந்து" என்னும் உமாபதி சிவத் திருமொழியாற் பெறப்படும். எமது அறிவு தொழிலிச்சைகளை நல்வழிப்படுத்தலே சைவக் கிரியையின் நோக்கமாம். தீயவழியிற் செல்லும் பொறிகளையு முள்ளத்தையும் அவ்வழிப் போகாமல் நேரேதடக்குதலரிது: அவற்றை நல்வழியிற்போக்க முயலலே தீநெறிச் செலவைத் தடுக்கத்தக்க முறையாம். அப்பர்சுவாமிகளது திருவங்கமாலை இதனை உணர்த்துகின்றது. "பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப், பற்றுக பற்று விடற்கு" என்னுந் திருக்குறளிலும் இக்கருத்து விளங்குகின்றது. சைவக்கிரியைகள் பொறிபுந்திகளைச் சிவநெறியிற் செலுத்தும், கிரியைகட்குயிராகிய மந்திரமும் பாவனையும் இவற்றைச் சிவமயமாக்கும்.

மந்திரஞ் சிவசத்திவடிவமென்ப. இது:

"சுத்தமாம் விந்து தன்னிற் றோன்றிய வாதலானுஞ்
சத்திதான் பிரேரித் துப்பின் றானதிட் டித்துக் கொண்டே
யத்தினாற் புத்தி முத்தி யளித்தலா லரனுக் கென்றே
வைத்தா மந்திரங்கள் வடிவென மறைக ளெல்லாம்,

மந்திர மதனிற் பஞ்ச மந்திரம் வடிவ மாகத்
தந்திரஞ் சொன்ன வாறின் கென்னெனிற் சாற்றக்கேணி
முந்திய தோற்றத் தாலு மந்திர மூலத் தாலு
மந்தமில் சத்தி யாதிக் கிசைத்தலு மாகு மன்றே."

என்னுஞ் சிவஞானசித்தித் திருவிருத்தங்களிற் கூறப்பட்டது. மந்திரசத்தியினளவு மனமொழிகட்கப்பாற்பட்டது. அதன் பெருமை தேவாரங்களிலொருவாறு விளக்கப்படும்.

விண்ணுற வடுக்கிய விறகின் வெவ்வழல்
உண்ணிய புகிலவை யொன்று மில்லையாம்
பண்ணிய வுலகினிற் பயின்ற பாவத்தை
நண்ணிநின் றறுப்பது நமச்சி வாயவே.

ஆயினும் அதன் பயன் அதை யுபாசிக்கு மளவுக்குத் தக்கதாகவே பெறப்படும். சிவோகம் பாவனையுங் கருடபாவனையும் பெரும பயன பயத்தலும் சண்டீசராற் சிவலிங்கமாகப் பாவிக்கப்பட்ட மணற்குவியல் பேரருள் சுரத்தலும் பாவனையி னாற்றலையும் பாவனையும் மந்திரமும் ஒன்றற் கொன் றின்றியமையாமையையு முணர்த்தும்.

கிரியை செய்யுங்கால் அதிலே மனப்பதிவும் அன்பும் அத்தியாவசியகமாம். இவற்றைப் பெறுதற்கு அதன் தன்மையும் நோக்கமும் கிரியை செய்வோனுக்குப் புலப்படல்வேண்டுமாதலால், இவற்றை விளக்குமொரு நூல் வேண்டப்படுகின்றது. இத்தகைய ஒரு நூலியற்றுதற்கு வேண்டிய அறிவலறி இதனை எழுதத் தொடங்கிய குற்றத்தை, நோக்க நலங் கருதிப் பெரியோர் மன்னிப்பர். கிரியைகளை விளங்கற்குச் சைவசமயவுணர்ச்சி வேண்டுமாதலால், இந் நூலின் முதலியல் சைவ சமயவியலாயிற்று. சில கிரியைப் பகுதிகள் பல கிரியைகளில வருதலால் ஒவ்வொரு கிரியைப் பகுதியையும் ஒவ்வொரு கிரியையினும் விளக்காது, கிரியையுறுப்புகள் யாவும் இரண்டாமியலிற் றனித்தனியே கூறப்பட்டன. பின்பு, பூர்வக் கிரியைகளாகிய தீட்சையும விவாகமும், தனக்கும் பிறர்க்குமுரியதாகிய சிவாலய பூசாதிகளும், அபரக்கிரியையும் முறையே நான்கியல்களிற் கூறப்பட்டன.

இந் நூல் செய்தற்குப் பெருந்துணையானவை காமிகம், சுப்பிரம்பேதம, காரணம், வாதுளமாகிய ஆகமங்களும் அகோரசிவாசாரியர் பத்ததியும் சித்தாந்தசாராவளியுமாம். வடமொழியறிவுக் குறைவுண்மையால் மொழிபெயர்ப்போடுள்ள ஆகம பத்ததிகளே பெரிதும் உபயோகிக்கப்பட்டன. இம் முயற்சியிலுதவபுரிந்த சைவாசாரியருள் ஆகமவறிவிற் சிறந்தவரும புலோலிப் பசுபதீசுரராலயத் தலைமையாசாரியருமாகிய ஸ்ரீமத் செ. இராமலிங்கக் குருக்களவர்களும் அருளாளரும் பரமேசுரக் கல்லூரிச் சிவார்ச்சகருமாகிய ஸ்ரீமத் சி. சரவணபவக் குருக்களவர்களுஞ் செய்த நன்றி பாராட்டப்படத்தக்கது.

இதிலுள்ள குற்றங்களை யெடுத்துக் காட்டுதல் பெரியோர் கடனும்.

சுழிபுரம்.
விக்ரோறியாக்கல்லூரி,
[illegible] ஆவணி மீ.

சு. சிவபாதசுந்தரம்



# சித்திரத் தேர்

வெள்ளோட்டத்தில்

# பக்தர் சமுத்திரம்

## தெல்லிநகர்த் துர்க்கை திருத்தலத்திற் தேசுநிறை காட்சி

**அடியவர்கள் ஆடினர், பாடினர், பணிந்தனர்**

ஆவணித் திங்கள் பத்தொன்பதாம்நாள் (4-9-78) தேவி அடியார்களுக்குச் சிறந்த தினமாய் விளங்கியது. தெல்லிப்பழைத் துர்க்காதேவி ஆலயத்திற் புதிதாய் அமைக்கப்பட்ட சித்திரத் தேர் வெள்ளோட்டம் இங்கு நிகழும் பெருந் திருவிழா இரண்டாம் நாள் முற்பகல் பதினொரு மணிக்குப் பல்லாயிரக்கணக்கான பத்தர்கள் மத்தியில் நிகழ்ந்தது.

இதற்கு முந்திய தினம் நிகழ்ந்த கொடியேற்ற வைபவத்திற் கலந்து கொண்ட அடியார்கள் தொகையோ பெரிது. அதனிலும் பெரிதாய்க் கூடினர் அடியார்கள் அதிகாலையிலிருந்து.

இவ்வைபவத்திலே சித்திரத் தேர் அமைத்த கலாகேசரி தம்பித்துரை அவர்களுக்கும், கோவிற்குருக்கள் சிவஸ்ரீ ஞா. குமார சுவாமிக் குருக்களுக்கும், நாதசுர கலாநிதி என் கே. பத்மநாதன் அவர்களுக்கும் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தனர் ஆலய நிர்வாக சபையினர்.

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நிகழ்ந்த இவ்வைபவத்தில் மாவை ஆதீனப் பிரதம குருக்கள் சிவஸ்ரீ ஷ. து. சண்முகநாதக் குருக்கள் அவர்களும் தேசியப் பேரவை உறுப்பினர் திரு. வி. தருமலிங்கம் அவர்களும், திரு. நம சிவப்பிரகாசம் அவர்களும் வாழ்த்துரை ஆற்றினர்.

சித்திரத் தேர்ச் சிறப்பு மலர் சிவத் தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களால் வெளியிடப்பட்டது.

## தெல்லிநகர்த் துர்க்காதேவி ஆலயம்

### தேர் விழா 13-9-78 புதன்கிழமை

| | | | | |
|---|---|---|---|---|
| காலை | 5-00 | மணி | : | ஸ்நபனாபிஷேகம் |
| | 6-00 | மணி | : | பூசை |
| | 6-45 | மணி | : | ஸதம்ப பூசை |
| | 7-30 | மணி | : | வசந்த மண்டப பூசை |
| | 8.00 | மணி | : | அம்பாள் உள் வீதி உலா |
| | 9 30 | மணி | : | அம்பாள் புதிய சித்திரத்தேரில் ஆரோகணித்தல் |
| பிற்பகல் | 3-00 | மணி | : | நவசக்தி அருச்சனை |
| | 4-00 | மணி | : | அம்பாள அருள்நடனப் பவனி |

### மகோற்ஸவ கால பூசை நேர அட்டவணை

| | | | | |
|---|---|---|---|---|
| காலை | 8-00 | மணி | : | ஸ்நபனாபிஷேகம் |
| | 9-00 | மணி | ; | பூசை |
| | 9-45 | மணி | : | ஸதம்ப பூசை |
| | 10-30 | மணி | : | வசந்த மண்டபப் பூசையும் அம்பாள் வீதி உலாவும் |
| | 11-30 | மணி | : | அம்பாள் இருப்படைதல் |
| மாலை | 6 00 | மணி | : | பூசை |
| | 6-45 | மணி | ? | ஸ்தம்ப பூசை |
| | 7-30 | மணி | : | வசந்த மண்டப பூசையும் அம்பாள உள்வீதி உலாவும் |
| | 10-00 | மணி | : | அர்த்தசாமப் பூசை |

# எம்மையெல்லாம் வாழவைத்த பெரியார்

**பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி**

"தம்மையும் நோக்கிக் கண்டு தகவெனும் வேலியிட்டுச்
செம்மையுள் நிற்பராகிற் சிவகதி விளையுமன்றே"

சைவம் சாலப் பெரியது. சைவநெறி சான்ற அடியார்கள் ஞாலப் பெரியார்கள்.

புலோலியூர் மூவுலகுக்குத் தந்த புண்ணிய சீலர் உயர்திரு. சு. சிவபாதசுந்தரம்பிள்ளை அவர்கள்.

ஞாலம் எல்லாம் இறைவன்புகழ் ஓங்கவேண்டும்! என்று வாழ்ந்து ஏனையோரையும் அவ்வழி வாழவைத்த சீலர் சைவப்பெரியார்.

பெரியாரின் சைவபோதத் தொடர் நூல்களையும் ஏனைய அரிய உரைகளையும் படித்தபடியாற்றான் சைவ சித்தாந்த அறிவை யான் ஒரு சிறிது பெறமுடிந்தது.

இந் நூல்கள் யாவும் எங்கும் எப்பொழுதும் இடைக்கும் வண்ணம் உதவும் சபைகளே உண்மையிற் சமயப்பணி செய்பவையாகும்.

இந்நெறியிலே சைவபரிபாலன சபையும் இந்து சாதனமும் எடுக்கும் எடுக்க இருக்கும் முயற்சிகள் பாராட்டுக்குரியன.

சைவப் பெரியாரின் நீங்கா நினைவுக்காக சிவ சத்தியைச் சதா வணங்குவோமாக.

## தங்கப் பதக்கம்

### பரிசளிப்பில் பாராட்டு

சைவ பரிபாலன சபையாரின் சைவசமய பாடப் பரீட்சையில் (1977) தங்கப் பதக்கப் பரிசைப் பெற்ற கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாசாலை 9-ம வகுப்பு மாணவி செல்வி இரமணி சியாமா நடராசா அவர்களுக்கும வாழ். இந்துமகளிர் கல்லூரி 8ம் வகுப்பு மாணவி செல்வி சாந்தினி சாமிநாதன் அவர்களுக்கும் பதக்கங்கள் 6ந் திகதி வழங்கப்பெற்றன.

இப் பரிசுகள் நியாயவாதி திரு. த. சோமசுந்தரம் அவர்களால் காலஞ்சென்ற நல்லூர் நியாயவாதி திரு. S. சுப்பிரமணியம் ஞாபகார்த்தமாக சபைக்கு வழங்கப்பெற்றன.

## நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை
மாவட்ட நீதிமன்றம்
வழக்கு: இல ஈடு 14142

1. முத்தன் சிங்காரன்
சமரபாகு, வல்வெட்டித்துறை
—வழக்காளி

எதிராக

1. பொடியன் கந்தையனும்
2 பெண பசுபதியும்
சமரபாகு, வல்வெட்டித்துறை
— எதிராளிகள்

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ் விபரிக்கப்பட்டிருக்கும் ஆதனத்தை 1978-ம் ஆண்டு ஐப்பசி மீ 21-ம் திகதி (21—10—78) சனிக்கிழமை முற்பகல் 10-00 மணியளவில் குறித்த ஆதனத்துள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும.

மேற்குறித்த எதிராளிகள் குறித்த வழக்காளிக்கு ரூபாய் 7677-75வும் மேலும் ரூபாய் 4000/- வருடமொன்றுக்கு நூற்றுக்கு பத்து வட்டி வீதம் வழக்கு அணைத்த திகதியாகிய 1977-ம ஆண்டு புரட்டாதி மாதம் 29-ந் திகதியிலிருந்து தீர்வைத் திகதியாகிய 1978ம ஆண்டு மாசி மீ 15ந் திகதி வரையுமான வட்டியும் அதன்பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும வரை சட்ட வட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு ஒன்பதுவீத வட்டியும் வழக்குச் செலவு ரூபாய் 250/- கொடுக்க வேண்டியிருப்பதாலும் செலவு கணக்குப் பார்க்கப்படவில்லை. (Not taxed)

### ஆதன இடாப்பு

வடமகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி உடுப்பிட்டிக் கோவிற்பற்று சமரபாகுதேவன் குறிச்சியிறை கூனன் தோட்டம் நி. பர. 40 ஷெ நி. பர. 7, 3/8 இவைகளில் கிழக்கரைவாசியில் வடக்குப் புறமாக அரைவாசிக்கு நி. பர. 11 குளி 15, 3/16 எல்லை கிழக்கு: ஒழுங்கை, வடக்கு வெள்ளையன சரவணைக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம், மேற்கு நாகர் மாணிக்கத்துக்கும் மறுபேருக்குமுடைள ஆதனம், தெற்கு தேவராசா பெண் சின்னப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம், இவ்வெல்லைக்குட்பட்ட நிலம், பனைகள, வடலிகள், தென்னைகள், வேம்புகள், கொட்டில் வீடுகளடங்கலிற் சொரியலாய் அரைவாசியும்,

மா. வே. புவனேந்திரன்
J. P,
நீதிமன்ற விற்பனவு கொமிஷனர்
விலைமதிப்பாளர்
"கமல கிரி"
புலோலி மேற்கு,
புலோலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கல்யாணப் படிப்பு

## வள்ளியம்மை திருமணப்படலம்

சென்ற தை மாதம் தொடக்கம் யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையின் ஆதரவில் நடைபெற்று வந்த கந்தபுராண படனத்தின் பூர்த்திப் படிப்பு வள்ளியம்மை திருமணப் படலம் ஆவணித் திங்கள் 24-ஆம் நாள் (9—9—1978) சனிக்கிழமை பிற்பகல் 4-00 மணி தொடக்கம் விசேட பூசை ஆராதனைகளுடன் சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும்.

சைவ அபிமானிகள் யாவரும் சமூகமளிப்பார்களாக.

மு. மயில்வாகனம், சமயப்பிரசார அமைச்சர்.
க. சிற்றம்பலம், செயலாளர்.
சைவ பரிபாலன சபை, யாழ்ப்பாணம்,
27-8-78.

# SAIVA SAVANT SHIVAPADASUNDARANAR

**N, SABARATNAM** B A. LOND Esq.
*(Joint Secretary, Saiva Periyar Centenary Society)*

The name of Shri Shivapadasundaranar is held in high esteem all over the Shaiva world of today. It is true that the younger generation of today knows little of his glorious life, hence the Saiva Periyar Centenary Society has in its list of priorities given the first place to the publication of his books and books about him.

Shri Shivapadasundaranar was born at a propitious hour into a family reputed for Tamil learning and spiritual excellence, Tamil Literature and Saiva Religion dominated the entire outlook of his forbears; and so it could be said that the Shaiva Religion was panting for him. Sri la Sri Arumuga Navalar's time was up; and perhaps his unfinished work called for his Second-in-Command. Jaffna, was longing for him. The Shaiva religion which had been in the strangle-hold of alien forces for two centuries needed another leader to continue the good work of Navalar who had blazed the trail and gave the people the right lead.

But Shivapadasundaranar belook himself primarily to Hindu Education In this, he saw the emancipation of our youth from Missionary influence that tempted them into their fold. Secondary education in English was a must for youth whose parents had the means. So the trek to Christian schools entrenched into seats of power through State patronage had to be arrested. Shivapadasundaranar dedicated his entire teaching career to this stupendous task mainly through his extra-ordinary capacities as teacher and administrator.

His achievements in the educational field and his views on the burning issues in Education and Educational Administration won for him national recognition Leaders like Dr Kannangara, Fr Legoc, H S Perera, P de S Kularatne vied with one another to exchange views with him With his powers of clear exposition and incontrovertible logic he argued for the education of children in the tradition of the parents' faith and called for the State Take Over of Schools as the only measure to fulfil the task. How prophetic he was could be seen in the implementation of his recommendation after 17 years.

In the field of Religion he won international fame with his magnum opus "Saiva School of Hinduism"—the only work by anyone in Sri Lanka to be deemed fit for publication by George Allen and Unwin, London.

Unique among his achievements is the abiding impac the had letf on his pupils whose influence is manifest in the Centenary celebrations of the Savant taking place on a country-wide scale.

To the present and future generation he lives ig his works on varied subjects, Saivaism, Education, Psychology, Commenteries, Logic etc It is unfortunate that his books Saiva Bhodam and Thiruvarudpayan which were in use for several years have been replaced by irrelevant selections. The Centenary Society will leave no stone unturned to have them re-introduced for no better books have ever been written to suit the children's needs

Shri Shivapadasundaranar was a scholar and author, teacher and social reformer, mighty intellect, lover of Shaivaism and lover of God. Another like him our land may not see for ages to come.

## குன்றிலிட்ட தீபம்போல

( 3-ம் பக்க வளர்ச்சி )

வருவார்கள். எல்லோரும் எழுந்து நிற்பார்கள். "பரஞ் பரஞ்சோதி பரனே போற்றி .. ..." என்று தொடங்கிப் பிரார்த்தனை நடத்தப்படும். பின் பூசை நிகழும். இராமநாதன் துரை அவர்கள் பிரார்த்தனைக்கு வரும்போதெல்லாம் சட்டை அணியாமல் வேட்டி சால்வை அணிந்தே பொன்மேனியுடன் வருவார். அப்படியே சைவப் பெரியார் சிவபாதசுந்தரமும் வருவார். பிரார்த்தனைவேளையில் ஒரே அமைதி நிலவும். சிவலோகக் காட்சியை அது நினைவூட்டும். பிரார்த்தனைக்குப் பின் பூசை நடைபெறும்.

சேர். பொன். இராமநாதன் தான் முதல்முதல் யாழ்ப்பாணத்தில் பள்ளிக்கூடத்தில் பிரார்த்தனை செய்து காட்டினார். இப்போது எந்தச் சிறிய பள்ளிக்கூடத்திலும் பிரார்த்தனை நடைபெற்றுத்தான் பாடசாலையில் படிப்பை ஆரம்பிப்பார்கள்

சைவப் பெரியார் சிவபாதசுந்தரம் அவர்கள் ஒரு முனிவர் என்று சொல்லலாம். முனிவர் என்பது ஆசையைக் காய்ந்தவர் என்பது பொருள். முற்காலத்தில் முனிவர்கள் காடுகளில் சில சிஷ்யர்களை வைத்துக் கொண்டு வாழ்ந்தனர். சைவப் பெரியாரும் பரமேஸ்வராக் கல்லூரிக்கு மேற்கே ஒரு ஆச்சிரமத்தில் வசித்தார். சில மாணவர்களும் அவருடன் வசித்தார்கள் அந்த மாணவர்கள் தோளில் சால்வை எடுத்து அவரை வணங்குவார்கள். அவர் வசித்த ஆச்சிரமத்தில் ஒரு அமைதி. ஒரே தெய்வச் சூழல் நிலவியது ஒருமுறை அடியேன் அப் பெரியாரை கந்த வனக்கடவையில் காணச்சென்றபோது அங்கும் ஒரு ஆச்சிரமம் தான் அவர் வாழ்ந்த இல்லம், சில சிஷ்யர்களை அங்கு கண்டேன். விவாகம் செய்திருந்த போதும் அவர் ஒரு பிரமசாரியாக வாழ்ந்தார். அவரின் தேவைகள் மிகச் சில. உணவு உடை முதலியவற்றில் ஒரு தூய்மை தொனிக்கும். அவரின் தலைப்பாகையும், கொடுக்கும், சட்டையும், குமிழ் மிதிதடியும் காண்போர்களின் உள்ளத்தில் ஒரு சமய உணர்ச்சியை வருவிக்கும் மாணவர்கள் அவரில் தனி மதிப்பு வைத்திருந்தார்கள். அவருடன் அவசியமில்லாத பேச்சு பேசக்கூடாது. கோபம் வந்தால் சிலநேரம் அது நிலைத்துப் பின் சாந்தமாய்விடும். நாவலரைப் போல திருமுறைகளில், புராணங்களில், சமய சாத்திரங்களில் அவருக்கு அளவு கடந்த பற்று அவற்றைப் பற்றி யாராவது குறைகள் கூறினால் கோபம் வரும். பெரியார் அவர்கள் போக போக்கியங்களை உதறித் தள்ளினார்.

'வாழ்வெனும் மையல்விட்டு வறுமையாம் சிறுமை தப்பித் தாழ்வெனும் தன்மைத்தோடும் சைவமாம் சமயம் சாரும் ஊழ்பெறல்' அரிது என்பதை உணர்ந்து சைவ சீலராக தவ வாழ்க்கை வாழ்ந்தார். 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்பது அவரது குறிக்கோள், ஆசிரியராகத் தரமபடைக் கடமையாற்றல். கோவில் தரிசனம் செய்தல், நாவலர்செய்த பணியைத் தொடர்ந்து மாணவர்களுக்கேற்ற நூல்கள் எழுதுதல், ஆசிரியர்களுக்கும் பொதுவாகச் சைவ மக்களுக்கும் நூல்களை எழுதுதல் முதலியன அவரின் பணிகளாகும். "ஞான நூல்தனை ஓதல், ஓதுவித்தல், நற்பொருளைக் கேட்டல், நன்றுஈனமிலாப் பொருள்தனை சிந்தித்தல் ஐந்தும் ஊறைவடி அடைவிக்கும் எழில்ஞான பூசை" என்ற சிவஞானசித்தியார் செய்யுளின் பொருளை உணர்ந்து அதன்படி ஒழுகி... வாழ்ந்தார்.

(அடுத்த இதழில் தொடரும்)

## நல்லூர், கந்தசுவாமி கோவில் திருவிழாவை முன்னிட்டு

# யாழ். மாநகராட்சி மன்றம் நடாத்திய சமய அறிவுப் போட்டி-78 முடிவுகள்.

ஷ திருவிழாப் பூங்காவன தினத்தன்று பரிசில்கள் வழங்கப்பட்டன.

முதல் மூன்று உயர்ந்த பரிசு பெறுவோர்;

1. நடுநாயகம் சூரியகுமார், கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை — தங்கப் பதக்கம்
2. திருமதி விஜயா இராசபரிமளா, கே. கே. எஸ். வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். — தங்கப் பதக்கம்
3. த. பிரபாகரன், அளவெட்டி — தங்கப் பதக்கம்

ஆறுதல் பரிசில்கள் பெறுவோர்

4. ப. கேஷினி, தெல்லிப்பழை
5. ந. கோபிரமணு, யாழ்ப்பாணம்
6. இரா. பாலபாஸ்கரன், சங்கானை
7. வீ. சண்முகரத்தினம், யாழ்ப்பாணம்
8. கு. குமாரகுருபர், இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்.
9. கு. கைலாயநாதன், கொக்குவில்
10. ஜெ. ஜெய்க்கிருஷ்ணன், நல்லூர், யாழ்ப்பாணம்
11. யோகினி இராஜேந்திரம், குரும்பசிட்டி, தெல்லிப்பழை
12. வசந்தகௌரி சண்முகராசா, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்
13. கு. வாமதேவன், மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை
14. இ. சின்னத்துரை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்
15. ரஜனி சுப்பிரமணியம், கருகம்பானை, காங்கேசன்துறை

(நமது நல்லை, நிருபர்)

## திருவிழாவில் தினமும் இன்னிசை நிகழ்ச்சிகள்

வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் வருடாந்த அலங்காரத் திருவிழாவை முன்னிட்டு தினமும் மாலை 6-30 மணி முதல் 8 மணிவரை இசை நிகழ்ச்சிகளை ஒழுங்குசெய்துள்ளனர். சிறந்த இசைச்செல்வர்களது இன்னிசைவிருந்து நிகழும்.

சேக்கிழார் சிந்தனை

### சைவப் பெரியார் வாழ்க்கையில் வாய்ந்தது.

மாசிலாத மணிதிகழ் மேனிமேல்
பூசுநீறு போலுள்ளும்
புனிதர்கள்
தேசினால் எத் திசையும் விளக்கினார்
பேச ஒண்ணாப் பெருமை
பிறங்கினார்
பூதம் ஐந்தும் நிலையிற்
கலங்கினும்
மாதொர் பாகர் மலர்த்தாள்
மறப்பிலார்
ஓதுகாதல் உறைப்பின் நெறி
நின்றார்
கோதிலாத குணப்பெருங்
குன்றனார்

—சேக்கிழார்

### திருவிழா
### கூட்டு வழிபாடும் சொற்பொழிவும்

வருகிற 12-9-78 செவ்வாய்க்கிழமை காங்கேசன்துறை - ஆதி மயிலிட்டி அருள்மிகு காசி பூதராயர்கோயில் 22-ம திருவிழாவில் யாழ். திருமுறை மன்றமும், யாழ் சைவசமய அபிவிருத்திக்கழகமும் இணைந்து பஜனை நிகழ்ச்சியை நடாத்தவுள்ளனர். அன்று மாலை 6½ மணியளவில் இந்நிகழ்ச்சியை நாயன்மார்கட்டைச் சார்ந்த சமூகத் தொண்டர் திரு. நி. இராசரத்தினம் தம்பதிகள் ஆரம்பித்து வைப்பார்கள். சைவ சமய வாழ்வுரையும் ஆங்கு இடம்பெறும். 16-9-78-ல் திருவூஞ்சல் விழாவுடன் திருவிழா நிறைவாகும்.

வெளிவந்துவிட்டன!

சைவப்பெரியார்
சு. சிவபாதசுந்தரம்பிள்ளை B. A.
அவர்கள்
நூறாவது
பிறந்த தினத்தை முன்னிட்டு
அவர்கள் எழுதிய

**சைவபோதம்**
முதலாம் புத்தகம் 1-50

**சைவபோதம்**
இரண்டாம் புத்தகம் 1 50

விபரங்கட்கு: அதிபர், சைவப்பிரகாச அச்சியந்திரசாலை
450, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவப் பெரியார் சிவபாதசுந்தரனாரின்

# சைவக் கிரியை விளக்கம் - இது ஒரு நிறை நூல்

மாவை பிள்ளைத் தமிழ், நாவலர் பிள்ளைத் தமிழ்,
சித்தாந்த விளக்கில் சைவக் கிரியைகள்,
சித்தாந்தச் செழும் புதையல் முதலிய நூல்களின் ஆசிரியர்
ஏழாலை,
**பண்டிதர் மு. கந்தையா B. A., அவர்கள்**
எழுதியுதவியது.

சைவ ஆகமங்கள் 28, உபாகமங்கள் இரு நூற்றுக்கும் அதிகம். ஒவ்வொன்றிலும் கிரியா பாதம் உண்டு. கிரியாபாதந்தோறும் சைவக் கிரியைகளும் உள்ளவைதான்.

ஆகமங்களின் கிரியாபாத அமைதி போதாதென்று சைவ பத்ததிகளே ஒன்றுபோல் பதினெட்டு உருவாயின. மற்றவை வழக்கிழந்தாலும் "சோமசம்பு பத்ததியும், அகோர சிவாசாரிய பத்ததியும்" இன்றுவரை இருந்தே வருகின்றன,

ஆகமங்களில் சைவக் கிரியைகள் பற்றிய செய்திகள் நிரம்ப இருக்கின்றன. பத்ததிகளில் அவை முன்பின் தொடர்பு முறைப்பட வகுக்கப்பட்டிருக்கின்றன, எனினும்,

"எதை ஏன் செய்வது? செய்யுங் கிரியைகளின் பண்பென்ன? பயனென்ன? அவற்றின் அருமையென்ன? பெருமையென்ன? — இவையெல்லாம் ஆகமங்களிலுஞ் சரி, பத்ததிகளிலுஞ் சரி உய்த்துணர்தற்கே விடப்பட்டுள்ளன.

உய்த்துணருந் தகுதியுள்ளோர் எத்தனை பேர்? விரல்விட்டு எண்ணியே விடலாம் என்பதில் தவறில்லை.

உய்த்துணருந் தகுதிபெற்றோர்க்கு மட்டுமா கிரியைகள்? அன்று; அன்று. சைவரெனவுள்ளோரனைவர்க்கு முரியன அவை, எவர்க்குமுரியன அவை. எப்போதைக்குமுரியன அவை எனில் அவை சார்பாக நிகழவேண்டிய ஆக்கப்பணி ஒன்றிருக்கில் அது எதுவாகலாம் என்பது கேள்வி? "அதுதான் இது என்ற (அககேள்விக்கு விடை கூறுவது போல்) வெளி வருகிறது "சிவபாதசுந்தரனாரின் சைவக் கிரியை" விளக்கம் எனனும் நூல.

நூற் பெயருக்கேற்ப யாரும் எதிர்பார்க்கக் கூடிய அளவுககுக கூடுதலான விளக்கங்கள் இந் நூலிலே தானுள்ளன.

கிரியை செய்பவர் விரலில் "பவித்திரம்" அணிவதேன்?

சங்கற்பஞ் சொல்லும்போது, கிரியை நிகழும் இடத்தைக் குறிக்கச் சம்புத் தீவில தொடங்குவதும், காலத்தைக் குறிக்க, துவிதீய பரார்த்தத்தில் தொடங்குவதுமாக இப்படி எட்டாத கொப்பெல்லாந் தொட்டு வருவானேன?

சகளீகரணம் பண்ணுவதால் கண்காண நிகழும் இம்மைப் பலன்களும் உண்டோ?

ஆலய விசேட பூசையில் சுவாமிக்கு விபூதி சாத்தும் பாவனை முடிவில் அவ் விபூதியால் கற்பூர தீபத்தை அணைத்து விடுகிறார்களே அது சரியாகுமா?

பிரேத ஊர்வலத்தில் சேவிதனைப் பொரி தூவி விடுதல் முறையாகுமா?

சிவன், விநாயகர், சுப்பிரமணியர் எல்லாம் ஒன்றென்கிறார்களே அது எப்படி?

விஷ்ணுவின் சக்தியல்லவோ லக்ஷ்மி, அவர் சிவாலயங்களில் இடம்பெறலாமா?

காப்புக்கட்டும் நூலைத் தட்டத்தில், அரிசியில், தேங்காயின் மேல் வைப்பதேன்?

விவாகக் கிரியா மண்டபத்தில் நாட்டும் முருக்கங் கொப்புக்கு அரசாணி என்று பெயர் வந்ததேன்?

இப்படி இப்படி விளங்காதனவும், விடுவிக்கப்படாதனவும் எத்தனையோ பல எங்கள் சைவக் கிரியைகள் சார்பாக உள்ளவைகள். சைவக் கிரியை விளக்கத்தைப் படித்தபின் இவற்றில் எதுவுமே விளங்காக் குறை இருக்கவே இருக்காது.

இன்னும், மாணவரொழுக்கத்துக்கும் விளக்கந்தருவது இந் நூலே. நடைமுறைத் திருவிழா ஊழல்கள், தீபாவளி ஊழல்களின் பொய்ம்மையைப் புரை புரையாகப் புகுந்து விளக்குவதும் இந்நூலே. எல்லாவற்றையுஞ் சொல்ல இடம் போதாது. இஃது தன்னளவில் ஒரு நிறை நூல் என்றல் அமையும்.

---

(1-ஆம் பக்கத்து வளர்ச்சி)

## புலத்துறைப் புலோலி......

திரியும் பாலர்கள் நாவில் ஆத்திசூடி, கொன்றைவேந்தன் முதலிய பாடல்களை அட்சரம் பிசகாமல் வரச் செய்தவர் பாருத்தைப் பாட்டி என்ப.

சைவப் பெரியார் புலோலியிலிருந்த ஆங்கிலப் பாடசாலையில் தமக்கு வேண்டிய ஆதாரக் கல்வியைக் கற்றபின் இந்தியாவுக்குச் சென்று அங்கே திருவனந்தபுரத்தில் சிறிய தந்தையார் பேராசிரியர் வ. கணபதிப்பிள்ளை என்பாருடன் தங்கியிருந்து, இடை நிலைத் தேர்வு என்னும் எவ். ஏ. பரீட்சையில் தேறினார். பின்னர் திருச்சினாப் பள்ளியிலுள்ள சென் யோசேப் கல்லூரியிற் படித்துச் சென்னைச் சர்வகலாசாலை பீ. ஏ, பரீட்சையில் கணிதம், அளவையியல் ஆகிய பாடங்களில் திறமையுடன் சித்தியெய்தினார். இவையேயன்றி ஆங்கிலம், வடமொழி, விஞ்ஞானம் ஆகியவற்றிலும் பரந்த அறிவைப் பெற்றார்.

இங்ஙனம் பட்டதாரியாகியதோடு, விவேக முறுக்கேறியவராய் ஈழத்துக்கு மீண்டு, தமது அயலிற் சில காலம் கல்வி கற்பித்த பின், திருக்கோணமலையில் சென் யோசேப் கல்லூரியல் இரண்டாண்டுகள் கடமையாற்றினார். பின்னர் யாழ்ப்பாணம் மீண்டு சேர். இராமநாதன் 22-8-1921 இல் ஆரம்பித்த பரமேஸ்வராக் கல்லூரியின் தலைமை ஆசிரியராகச் சில காலம் கடமையாற்றினார்.

இவரின் நிர்வாகத் திறமையையும் கற்பிக்கும் ஆற்றலையும் அறிந்த கல்லூரிகளின் முகாமைக்காரர் பலர் இவரைத் தத்தம் கல்லூரிகளுக்கே முதல்வராக எடுத்துக்கொள்வதற்கு வெகுவாக முயன்றனர். சுளிபுரம் விக்ரோறியாக் கல்லூரி முகாமையாளர் செல்லப்பா அவர்களின் வேண்டுகோளை மறுக்க முடியாமல் அங்கே அதிபராயிருந்து அக் கல்லூரியை முதற்றரமான கல்வி நிலையமாக்கினார். மானிப்பாய் இந்துக் கல்லூரியின் முகாமையாளரில் ஒருவராகிய சித்தாந்த வினோதர் திருவிளங்க தேசிகர் விரும்பியவாறு சில காலம் அங்கும் கடமையாற்றினார். இளைப்பாறிய பின்னர் 1933-ஆம் ஆண்டுதொடக்கம் 1936-ஆம் ஆண்டு வரையும் பரமேஸ்வராக் கல்லூரியின் கௌரவ மேற்பார்வையாளரா யிருந்து கொண்டே பல வகுப்புகளிலும் பாடஞ் சொல்லி வந்தார்.

எந்த மாணவனையும் படிப்பார்வமுள்ளவனுக்கிப் பரீட்சைகளில் சித்திபெறச் செய்ய வல்ல சாமர்த்தியம் அவரிடமிருந்த தனித் திறமை என்றே சொல்ல வேண்டும். இந்தப் பிறப்பில் இவர்கள் மெற்றிகுலேசன் சித்தியெய்தமாட்டார்கள் என்று வேறு ஆசிரியர்கள் ஒதுக்கிவிட்ட மாணவர் பலரை, இவர் முயற்சி எடுத்துப் படிப்பித்து பீ. ஏ பி. எஸ். சி, பட்டங்கள் பெறச் செய்த சந்தர்ப்பங்கள் பலவுள.

இந்த வகையில் கல்வித் துறையில் இவரிடமிருந்த அறிவாற்றலைக் கற்றவர் பலருக்கும் பயன் செய்யக் கருதிய பெரியார்கள் பலர், இவரை நூல்கள் எழுதுமாறு தூண்டியதால் இவர் தமக்குத் தாடனமாயிருந்த தர்க்கம் என்னும் அளவையியல், உளவியல் என்னும மனோதத்துவம். கற்றலும் கற்பித்தலும என்னும் கல்வியியல சம்பந்தமான நூல்களை எழுதி உதவினார். இவற்றால் கல்வியுலகு பெரு நன்மையெய்திற்று. இலங்கைக் கல்வித் திணைக்களமும், கல்வியமைச்சும் இவர் பெருமையை வியந்தனர். இவருடன் தொடர்பு கொண்டிருந்தனர்,

இஃது இவ்வாறாக இவர் தாம் ஆன்மார்த்தமாக வழிபட்டு வந்த முருகப் பெருமானிடத்து அளவு கடந்த பக்தியுள்ளவராகிக் கந்தபுராணம் சம்பந்தமாகப் பல கட்டுரைகளும் விரிவுரைகளும் எழுதினார். சைவ சித்தாந்தத்தைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் எல்லோரும் அறிந்து பயன்பட வேண்டுமெனக் கருதிப் பல நூல்களை எழுதி அடக்க விலைக்கு விற்கச் செய்தார்.

முருகப் பெருமானுக்கு அணுக்கத் தொண்டு செய்து வாழ்ந்து உய்யக் கருதிக் கந்தவனக் கடவையில் வடக்கு வீதியில் ஒரு புறத்துக் குடிசையமைத்து அமைதியாக முப்போதும் பெருமானை வணங்கி முனிவரென வாழ்ந்தார்.

சைவப் பெரியாரின் நூலாசிரியத் தகைமையை ஈழத்தவரேயன்றித் தமிழ்நாட்டவரும் வெளிநாட்டவரும் நன்கறிவர். திருக்கைலாய பரம்பரைத் தருமபுரவாதீன மகாசந்நிதானம் அவர்களின் அபிமானத்துக்கு ஆலக்கான சைவப் பெரியார். மடாதிபதியின கட்டளையின்வண்ணம் சிவஞானபோதத்தை ஆங்கிலத்தில் மரபுநெறி பிசகாமல் விளக்கி எழுதினார்.

இந்து சமயத்தில் சைவத்துறை என்னும் ஆங்கில நூலொன்று இலண்டனில் 'அலன் அன் அன்வின்' நிறுவனத்தாரால் வெளியிடப்பெற்றது, அது அண்மையில் மலேயா அருள்நெறித் திருக் கூட்டத்தாரால் கோலாலம்பூரில் அழகாக மறு பதிப்புச் செய்யப்பெற்றுள்ளது. சைவத்தின் மகத்துவம் என்னும் நூலையும் பெரியார் ஆங்கிலத்தில் எழுதியுள்ளார்.

சித்தாந்த சாஸ்திரங்களிலொன்றும் சித்தாந்த அட்டகத்தில் ஒன்றும் என்னும் பெருமைவாய்ந்த திருவருட்பயனுக்கு முன்னர் நிரம்பவழகிய தேசிகர் உரை எழுதியுள்ளார், அதிலுள்ள கடினமான பகுதிகளை இலகுபடுத்தி முதலில் உரையெழுதிய பெருமை சைவப் பெரியாருக்கே உரியதாகும்.

சைவப் பற்று மிகுந்த பெரியாரவர்கள் சைவாசார சீலராய் சைவத்தின் கொழுகொம்பாய் வாழ்ந்தவர். சைவ சமயத்தைப்பற்றிச் சாங்கோபாங்கமாகத் தர்க்கரீதியாகப் பேசியவர். எழுதியவர். தாம் எழுதிய நூல்களைச் சைவம்வளர்க்கும் யாழ் சைவபரிபாலனசபை, கொழும்பு விவேகானந்தசபை முதலிய சபைகளுக்கு உரிமையாகக் கையளித்தவர். 'தேன் பொந்து' என்று ஆறு

---

### பெருந் திருவிழா

உரும்பராய் கருணாகரப் பிள்ளையார்கோயில் வருடாந்த பெருந்திருவிழா 7-9-78 வியாழக்கிழமை கொடியேற்றவிழாவுடன் ஆரம்பமாகின்றது.

சிவாசார்யமணி பிரமஸ்ரீ வை. சபாரத்தினக் குருக்கள் தலைமையில் பிரமஸ்ரீ ச. பரமேஸ்வரக்குருக்கள் திருவிழாக் கிரியைகளை நடாத்தி வப்பார் 16-9-78 வெள்ளிக்கிழமை தேர்த் திருவிழாவும் அடுத்தநாள தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும. இவ்விசேட திருவிழாக்களில உபந்நியாசங்கள் கதா பிரசங்கம் முதலியன நடைபெறவுள்ளன,

### சமய விரிவுரைகள்

நாரந்தனை - வடக்கு தான்தோன்றி அம்மன் கோவிலில சென்ற 6-9-78 புதன்கிழமை இரவு 8-00 மணி தொடக்கம் மேற்படி கோயில் பரிபாலன சபைத் தலைவர் திரு, நா. கந்தஞானி அவர்கள் தலைமையில சைவ சமய விரிவுரைகள் நடைபெற்றன. 'புலால்உண்ணாமை' 'பசு ஓபபல்' ஆகிய பொருளைகளில் அறிஞர் உரைநிகழ்த்தினார்.

---

### "எங்கள் வள்ளல்— இன்றிருந்தால்?"



பத்தர்: "......செய்நன்றி கொன்றார்க்கு உய்வில்லை" என்று அறுதியிட்டு உறுதியாகக கூறியிருக்கிறார் வள்ளுவதேவர். தவசிரேட்டராய்த் திகழ்ந்து செயற்கருஞ்செயல்புரிந்த சைவப் பெரியார் சிவச்சுந்தரனார் நினைவாக, செய்யத்தக்க பொருத்தமான திருப்பணி பற்றி நமது சாதி சிந்திக்கவில்லை! ஆம்! சிந்திக்காது.

சித்தர்: "சிந்திக்கிறார்கள்; செயலாகட்டும் அதுஎன்று சொல்லுங்கள்! — அவரது அரிய ஆக்கங்களைப் படிப்பது— அதன்படி நடப்பது அவரை நினைக்கும் பணியாகாதோ? 'குருசீடபரம்பரைக்கல்வி செழித்துவளருதற்கான ஒரு ஞானபீடம் யாழ் வளாகத்தில் அமைய வேண்டுமென்ற ஒருஞான எழுச்சிக்குரல்சைவமககள் உள்ளத்தை வீறடையச் செய்யவில்லையா? வள்ளல் இராமநாததுரை இன்றிருப்பரேல் — இப்படியோர் பீடம்நிறுவியேயிருப்பார்! அவர்தேடிய திரவியத்தில் ஓர்பகுதி இதற்காகட்டுமே!

"நாயன்மார் - நாதன்"

---

மூக நாவலர் அவர்கள் கூறிய திருக்கேதீச்சரத்தைப் புனருத்தாரணஞ் செய்வதில் ஓயாதுழைத்த சைவப்பெரியார் திருப்பணிக்கு வேண்டியன உபகரித்து அங்கே எழுந்தருளியுள்ள நடராசப்பெருமானையும் வடிப்பித்துக் கொடுத்தவர், அன்றி, அங்குள்ள திருஞான சம்பந்தர் மடத்தையும் ஆரம்பித்துத் தொண்டுசெய்யுமாறு நண்பர்களையும் தம் மாணவர்களையுந் தூண்டித் துணையாக நின்றவர். இவ்வாறுகத் தொண்டு செய்து வாழ்ந்த பெரியார் 14-8-1953 ஆடி அத்த நன்னாளில் இறைவனடி சேர்ந்தார். இவர் நினைவு என்றும் நிலவுவதாக,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒழுக்கம் உயர் குலம்

திரு. ந. சோமசுந்தரம், இருபாலை,

தருமம் - புண்ணியம் நன்மை - சுகம், ஒழுக்கமுடைமை - உயர்வு
அதருமம் - பாபம், தீமை - துக்கம், ஒழுக்கமின்மை - தாழ்வு

( 30-6-78 வளர்ச்சி )

உயர்ந்த பண்புகளை நாளாந்தம் கைப்பிடித்து வாழ்பவர் பற்றின்றி வாழ்தலையே சிறப்புடையதென தமிழ் வேதம் தந்த முனிவர் கூறுவதும் இறைவன் திருவடி அடைதற்குப் போதிய தகைமை பெற்றவர் சிவனை வணங்குவதற்கும் உயர் ஒழுக்கத்தைக் கடைப் பிடித்தற்கும் உரியவராய் சிவ சிந்தை யுடைய நல்ல குடியிற் பிறந்தோரே என்று சிவஞான சித்தியார் பேசி வருவதும் ஒன்றேயாம்.

உயர்ந்த ஒழுக்கத்தில் உரிய வகையில் அமைவர். நிலை பெற்றவர் பெறுதற்கரிய பெரும் பேறாகிய வீட்டை (மோட்சத்தை) அடைவதற்கு உரிமையுடையோராவர். உயர் ஒழுக்கத்தில் நிலைபெற்ற குடியிற் பிறந்து சிவஞானந் தலைப்படுவோர் இறைவன் திருவடிப் பேறு பெறுவதற்கு இவ்விதமாக ஒழுக்கத்தை நிலைகளாகவுடைய குடியிற் பிறவாதவராயினும் "சிவாயநம" என்ற இறைவன் திருநாமத்தை உறுதியாகப் பற்றுவராயின் அது உயர்ந்த குடிக்குரிய பண்புகளைக் கொடுத்து உயர்த்தவல்லது என்பதை அறிவுறுத்தவே திருநாவுக்கரசுசுவாமிகள் தமது நமச்சிவாயத் திருப்பதிகத்தில்,

"சலமிலன் சங்கரன்
சார்ந்தவர்க் கல்லால்
நலமிலன் நாடோறும்
நல்குவானலன்
குலமில ராகினுங்
குலத்துக் கேற்பதோர்
நலமிகக் கொடுப்பது
நமச்சிவாயவே"

உயர் ஒழுக்கத்தில் நிலை நிற்கும் பேற்றியுடையோர் மனிதராக இருப்பினும், அவர் தேவரும் வணங்குதற்குரிய உயர்நிலை எய்துதற்கும், இறைவன் திருவடியடைதற்கும் தகுதியுடையோராய் அமைவர். ஆதலால் இம்மைக்குச் சிறப்பும், மறுமைக்குத் தேவலோகமும், வீடு பேறும் அளிக்கக்கூடிய ஒழுக்கத்தைப் பாதுகாத்தல் இன்றியமையாததொன்றென உணர்ந்து அதன்வழி நிற்க யாவரும் முயல வேண்டும்.

## உங்களுக்குத் தெரியுமா?

1 சமயக்கிரியைகள் செய்யப்படும்போது ஏன் தர்ப்பையினலே மோதிரஞ் செய்து அணிந்துகொள்கிறோம்? ஓமகுண்டத்திலே நெருப்பை உண்டாக்கி, அதனுள்ளே நெய், பொரி, தேங்காய், சாதம் முதலியன இடப்படுகின்றனவே. ஏன்? பூரணாகுதி என்றால் என்ன? அது எங்ஙனம், ஏன் செய்யப்படுகின்றது? நவதானியங்கள் ஏன் முளைக்கப் போடப்படுகின்றன? வாஸ்து சாந்தி என்றால் என்ன? அது ஏன் எப்போது செய்யப்படுகின்றது?

2 தீக்ஷையின் பொருள் என்ன? தீக்ஷையிலே எத்தனை வகைகள் உண்டு? தீக்ஷையின் பலன்கள் யாவை?

3 விவாகக் கிரியையில் நிகழும் சங்கற்பம், பிள்ளையார் பூசை, புண்ணியாகம், பஞ்சகவ்வியம், அங்குராப்பணம், இரட்சாபந்தனம், பிதுர் ஆசீர்வாதம், மணமகனுக்கு உபசாரம், கன்னிகாதானம், தாலி கட்டுதல், அக்கினி பூசை, ஏழடி வைத்தல், அம்மி மிதித்தல், அக்கினியை வலம் வருதல், அரசாணி முதலியன பற்றிய விளக்கங்கள் யாவை?

4 திருக்கோயிலின் தத்துவம் என்ன? தேவப் பிரதிட்டை எங்ஙனம் செய்யப்பட வேண்டும்? கொடியேறித் திருவிழா நடக்க முன்பு கிராம சாந்தி முதலியன நடைபெறுகின்றனவே; ஏன்? நவராத்திரி, விளக்கீடு, தீபாவலி முதலியவற்றின் விளக்கம் என்ன?

5 ஒருவர் இறந்தால் அவருடைய பிரேதத்திற்கு வீட்டிலும் சுடலையிலும் செய்யப்படும் கிரியைகளின் விபரங்கள் என்ன? அந்தியேட்டி மண்டபம் எப்படி அமையவேண்டும்? அங்கே நிகழும் கிரியைகளின் கருத்தென்ன? அஸ்தி சஞ்சயனம் என்றால் என்ன? ஏகாதிட்டம், சபண்டீகரணம் இவை ஏன், எப்படி, எப்போ செய்யப்படுவன?

இவை முதலாய பல செய்திகளையும் விளக்கங்களையும் அறிந்துகொண்டு சைவக் கிரியைகளைப் பத்தி சிரத்தையோடு செய்து மகிழ்ச்சியடைய

வாசியுங்கள்

சைவப்பெரியார்

சு. சிவபாதசுந்தரம் B. A. அவர்கள்

இயற்றிய

## சைவக் கிரியை விளக்கம்

விலை: ரூபா 5-00

விபரங்களுக்கு:

அதிபர், சைவப்பிரகாச அச்சியந்திரசாலை,
450, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 356

சைவப் பெரியார்

## செந்தமிழ்

"உன்னுடைய உடம்பு பருத்துவிட்டது" என்று உன்னைப் பார்த்து நான் சொல்லுகிறேன். உன்னுடைய உடம்பு என்றதனாலே நீ வேறு, உடம்பு வேறு என்பது விளங்குகிறது; உன்னுடைய புத்தகம், உன்னுடைய வீடு என்று சொல்லும்போது நீயும் புத்தகமும் வேறு, நீயும் வீடும் வேறு ஆதல் போல, நீ என்பது உயிர். உயிருக்கு ஆன்மா என்று பெயர் 'நீ' என்று குறிப்பதும் ஆன்மா அவன் என்று குறிப்பதும் ஆன்மா, நான் என்று குறிப்பது ஆன்மா. நாங்கள் எல்லோரும் ஆன்மாக்களே. என்னுடைய சிநேகிதன் இறந்துபோனான் என்பதன் கருத்தென்ன? என்னுடைய சிநேகிதனாகிய ஆன்மா, தான் இருந்த உடம்பினின்றும் நீங்கிவிட்டதென்பதே. எனவே ஆன்மா அழியவில்லை என்பது விளங்குகிறது. உடம்பு அழிந்துபோவதை நாம் காணுகின்றோம். ஆன்மாக்களாகிய நாங்கள் ஒரு காலத்தும் அழிவதில்லை. ஆன்மாவானது காலத்துக்குக்காலம் எடுத்துக்கொள்ளும் உடம்பே அழிந்துபோவது.

இந்த உடம்பை ஆன்மா எடுப்பதும் விடுவதும் உடம்பினுடைய விருப்பமா? அல்லது ஆன்மாவினுடைய விருப்பமா? வெறும் உடம்பு பேசுவது அறிவில்லை. ஆதலால் உடம்பு ஓர் உயிரை விரும்ப இயலாது. ஆன்மாவானது ஓர் உடம்பைத் தன்னுடைய விருப்பத்தின்படி எடுப்பதாகவும், விடுவதாகவும் தோன்றவில்லை. ஏனெனில் எத்தனையோ ஆன்மாக்கள் கொடிய நோயுள்ள உடம்பை எடுத்திருக்கின்றன. அவை தங்கள் எண்ணப்படி உடம்புகளை எடுக்கமாட்டா. ஆனதால் ஆன்மாவினுடைய விருப்பமுமன்று. உடம்பு விரும்பவும் மாட்டாது. ஆதலால் இது ஆன்மாவுக்கும் உடம்புக்கும் தலைவனாகிய கடவுளுடைய செயலேயாம்.

— சைவபோதம் 2

# Saiva Periyar Centenary Reproduction

## GLORIES OF SHAIVAISM

*By S. Shivapadasundaram* B A.

(continued from last issue)

The Charya form of worship consists in rendering bodily service in temples, service to devotees and poojah to any one of the well-defined images as those of Maheswara, Vinayaka and Subramania. In the Kiriya grade the love is manifested in pooja to the Shivalingam. Those in the Charya grade can also worship the Shiva Lingam but cannot perform the poojah. Whereas in the first grade there is more exercise than to the mind and in the second grade more to the mind than to the body, worship in the Yoga grade is purely mental. In these three grades the worshipper regards God as different from himself and uses image for worship. In the fourth grade, the worshipper identifies himself with God and finally becomes one with Him, which is the ultimate goal.

There is another form of our approach to God which can hardly be called worship. In this form, importance is attached to things concerned with the body. Thoughts of personal welfare of wife and children, of wealth, position, ambition etc, fill the heart of the worshipper who prays for these. These thoughts are inconsistent with worship. They cannot co-exist with the thought of God. Such consideration can find no place in the presence of God. These are functions of Anava and it must be our sincere endeavour to belittle these as much as possible. Besides, we have ample time to pay attention to these all the time we do not worship and we may think of these if we wish. If we spend an hour a day in worship we can devote to these the remaining fifteen hours during which we are awake. Some of these we get as the result of past Karma, some others by hard work and others we may never get. Worship has nothing to do with these things. We derive only what our Karma entitles us to. We shall not attain any good for the merely asking God for it. If we could, the Law of Karma would fall to the ground, and with it our religion too. Everyone who begs for favour from God gets only a few of those he begs from God. These reach him as Karmic effects. These he would have got even without begging for them. Everyday we get endless things without asking God for them. Atheists evidently get a great many of the things they wish to have without any appeal to God. It is thus waste of breath to beg favour from God. Cases are mentioned in our Puranas of men who performed penances and got from God worldly ends which are only wages. Markandeyar's life is said to have been prolonged as his wages for his pooja.

மைந்தர் நோமை வழுத்தி மாசிலா
முந்தை பூசனை முயன்ற தன்மையால்
அந்த மிலவர்தார் ஆயுள் நிற்குயாம்
தந்த நலகூலமா என்று சாற்றினன்.

### PLACES OF WORSHIP

The home and the temple are the usual places of worship. To a religious man, any place is good enough for worship. Such a man has said, "Think of the Feet of Shiva at all times whether sitting or standing, lying or walking. With most people, worship or at is short and simple. immediately after wash they devote a few minutes to worship. some sing a a few sacred songs. Some others repeat a mantram a hundred times with their minds fixed on God. Some others perform Sandhya Vanda am (சந்தியாவந்தனம்) which includes the above two items also. A few perform poojah which is a long form of worship. Just before each meal, most people have a short form of worship. A common practice is to wash the face and hands and to wear Thiru-Neeru with a few repetitions of some mantram. A good many contemplate God on going to bed and on rising from bed.

In the temple, the mind gets most attuned to worship during the poojah which is attended by elevating associations. The temple is equipped with everything necessary for worship and is as superior to the home in the facilities for worship as a

(continued on page 2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Hindu Organ

Friday, September, 1&8. 1978.

# CRITIC OF CRITICS

To be skilled in textual criticism, one must be a top-most scholar.

Navalar the Great silenced the stubborn proselytizers by his capacity to meet criticism. In fact he turned the tables on those crusaders against the Saiva Faith and emerged as the Champion Reformer of Hinduism. Closely following this conception, Saiva Periyar Shivapadasundarampillai chose an additional field — the medium of the language of the foreign proselytizers.

Expounding the Saiva Siddantha philosophy as outlined in the Sivagnanabodham of Meibanda Swamigal, our Saiva Periyar went a little further and ably refuted the fallacious criticisms aimed at our sacred Faith.

Somasundara Thambiran Swamigal of Dharmapura Adhinam, a religious Mutt that has contributed greatly to the preservation of Saiva Culture, in his search for a 'good exponent of Shaivaism who can correct all misconceptions', found in our Saiva Periyar the ideal scholar to confound critics. The reference was to a book written by Miss Violet Paranjoti M A., Ph. D. on Saiva Siddhanta Philosophy.

Here we quote with great gusto the worthy words of the Thambiran Swamigal:-

"By the Grace of God, my sincere friend, Sri Shivapadasundaram of Jaffna, consented, at my request, to review Miss Paranjoti's work, and has written this little book, clearing the misconceptions by logical arguments suppported by a good number of homely illustrations. How Chit can operate on Achit and vice versa, how the changes in the evolutes of Maya are only relational and not essential, how Maya illumines the soul and is the opposite of Anava are among the subjects fully explained. His rich experience as the author of several works on Saiva Siddhanta has been brought to bear in his treatise making the answers to the critic most convincing. May his good labour dispel all misconceptions on this subject. May Lord Shiva bestow His choicest blessings on him."

It was left to our Saiva Periyar competently to continue the trend of Navalar Peruman. As a stalwart school master of great renown, Saiva Periyar could skillfully survey the field of religious crusades and successfully spot the spheres that needed immediate attention. Hence the Saiva Potham series and the brilliant expositions of Saiva Siddantham—The Glories of Shaivaism and An Outline of Shivagnanabodham.

In this memorable year of the Centenary of the birth of our Saiva Periyar let us be dutiful to our Saiva Faith by helping the present generation read what Saiva Periyar had left behind as a lasting legacy to the Saiva World namely his writings.

Quite appropriately the Saiva Periyar Centenary Society and the Saiva Paripalana Sabhai have faithfully undertaken this duty.

# GLORIES OF SHAIVAISM

(continued from page 7)

school is to a home in the convenience for study. The unique value for temple worship is recognised not only by the Shaiva religion but by every other religion also. Protestant Christians who use only an empty hall as their place of worship regard it as indispensable to their religious life. Christians call their places of worship the Church which means God's abode. They value it so highly that the word has come to mean religion itself. For example, the Church of England means the religion of the English State. Our Saints regard the temple as the life-centre of a village or a town. Appar says, "The town without a temple is not a town; it is mere jungle." He means that the inhabitants of the place are no better than jungle trees. Umapatishivam tells his mind "Do not go to those Chandalas whose hearts have killed the thought of Shivalayam." All religionists regard the temple as a sacred place where God's presence is specially felt and which serves as a place of worship and nothing else.

A Shaivite goes to temple after bath but before meals. The bath tones the brain and fits the mind for deep contemplation. A light stomach is helpful to concentration and self-control On his way to temple, he is enjoined to think of God, repeating some mantram or sacred songs. He is thus safe from distraction on the way When he enters the temple he prostrates and worships, hallowing both his body and his mind. He gets in and finds himself in front of the sacred presence of God.

The temple image is trebly divine. It is called Vigraham, which means a body. Just as we identify ourselves with our bodies we identify God with a Vigraham.

Secondly, the images signify God. One of the most significant of these is that of Nataraja. The ring which encircles it (திருவாசி), is Pranava. The Pranava consists of five sounds representing respectively God Parashakti, the soul, Adishakti and Malams, i e, God and the whole universe. The drum in one of the right hands indicates creatorship. The other right hand indicates protection It tells you not to be afraid of anything. The fire in one hand means destruction. The right feet pressing down the giant shows the crushing of Anava. The uplifted foot offers Divine Bliss. The smile is the welcome offered to the worshippers.

Besides symbolising the Grace of God they also influence the worshipper. The drum reminds him of the fact that he was created for the attainment of oneness with God and he must therefore lead a religious life. The uplifted hand teaches him that he need have no fear at all, but he should do the right with no thought of success or failure. The fire teaches him that it may overtake him at any time and he must therefore make the best use of his talents and time. The right foot induces him to crush anavic desires. The uplifted foot offers to him Divine Bliss, which is his ultimate goal, and towards which he ought to march straight, without deviation.

The stimulus given by these symbols produces an appropriate reaction in the worshipper. Seeing the symbol of creation he realises that he was created by God for the purpose of attaining Divine Bliss and that he must therefore endeavour to make himself Shivamayam by clothing his thoughts, words and deeds with his love for God. The hand which symbolises protection causes the response in the worshipper of leading a moral and religious life. His response to the third hand is one of hard work. As death may occur at any time the present time is everything to him and the future is undependable. He responds to the right foot by subjugating his desires and keeping them under control. In response to the uplifted foot, he loves God with all his heart and constantly thinks of His Sacred Feet. Most other images have two hands called Abhayam and Varadam. The former offers protection and the latter offers Divine Bliss.

The Shiva Lingam intended for the more advanced souls is more concentrated in its significance. The Lingam indicates Gnanam (knowing) and its seat indicates Kriya (doingness). The former shows that God is all knowing and is the source of all knowledge and the latter that He is the Lord who performs the Pancha-krityam. As Parameshwaran, He is beyond us and is unrelated to us; as Pati, He is in us and with us, our liberator and bliss-giver, liberating us by Shristy, Sthithi, Samharam and Tirobhavam and giving bliss by Anugraham. The word Lingam is a compound of 'layam' and "gam" which mean He who causes the involution and evolution (of the animate and inanimate universe,

Another very significant image of God is the Sun. It is more than a million times larger than the earth and gives us an idea of the greatness of God, which no other image can give so tangibly and convincingly. In its presence, living beings are born, live and die in this earth This shows how, in the mere presence of God' the whole universe undergoes evolution and involution. The worship of God in the sun is the very first item of Shivapoojah.

Thirdly, in the installation ceremony Prathishtya) of an image, the mantric form of God is impressed on the image. This mantric form overshadows the stone or metal of which it is made and stands before us as God Himself. Sages say that in the mantric form God is as visibly present as butter in curd The daily mantric poojaperformed after the installation makes the presence more and more visible. Just as, if the curd is churned, the butter comes out in its true form, so if we worship God with love and knowledge, He will bless us with His Darsanam, Temples visited by Saints are more sacred than others as their invocation of God produces a more lasting effect than the usual installation ceremony.

(To be continued)

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்

Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna at their Saiva Prakasa Press, 450 K. K. S. Road, Vannarponnai, Jaffna on Friday, September 9, 1978.

Editor - in - Chief : R. N. Sivapirakasam

இந்துசாதனம்

சந்தா விபரம்

ஆண்டுச் சந்தா:

| | |
|---|---|
| உள்ளூர் | — ரூ 18-00 |
| புறநாடு | — ரூ 50-00 |
| ஆகாயவழி | — ரூ 75-00 |

அதிபர்
450, காங்கேசன்துறை வீதி
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org